CC.No.99/2019 (JM.No.II, DHARMAPURI)

19.05.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–6 : சீனிவாசன், காவல் உதவி ஆய்வாளர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மனித உரிமை சிறப்பு பிரிவில் இருந்து 30.04.2020 ஓய்வு பெற்றேன். கடந்த 2018 ஆண்டு நான் தொப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 12.07.2018 ஆம் தேதி நான் நிலைய அலுவலலில் இருந்தபோது நந்திகவுண்டன் மகன் மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின்பேரில் தொப்பூர் காவல் நிலைய குற்ற எண்.153/2018 பிரிவு 279, 337, 304(எ) இ.த.ச ஆக வழக்கு பதிவு செய்தும், அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவைகளை கனம் JM.2க்கு அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் வெளி அலுவலில் இருந்ததால் உயர் அதிகாரி அவர்களின் வான் செய்தி உத்தரவு படி இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். இவ்வழக்கை புலன் விசாரணைக்கு மேற்கொண்டு 12.07.2018 காலை 08.45 மணிக்கு சம்பவ இடமான தருமபுரி – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் செக்போஸ்ட் எதிரில் சென்ற சாட்சிகள் மூர்த்தி, சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரித்தேன். பின்னர் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் சாட்சிகள் மூர்த்தி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புறப்பட்டு சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று இறந்துபோன தமிழ்செல்வன் என்பவரின் இன்டிமேசன், விபத்து பதிவேடு மற்றும் காயம் அடைந்த சோமு, கோபிநாத், சுகன்யா, கோவேசு, தனுசிரி, ரித்திஷ் ஆகியோர்களின் விபத்து பதிவேடு பெற்று சவக்கிடங்கில் இருந்த தமிழ்செல்வன் பிரேதத்தை பார்வையிட்டும், பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் பிறப்பித்தும் 11.30 மணி முதல் 13.30 மணி வரை தமிழ்செல்வன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் இறப்பின் காரணம் மற்றும் நேரம் குறித்து பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை சான்று வழங்க கூறி வேண்டுகோள் கடிதத்தில் தலைமை காவலர் திரு.ஜீலன்பாஷா என்பவர் மூலம் 13.40 மணிக்கு சட்டம் சார்ந்த மருத்துவர் சேலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பிரேத விசாரணை சாட்சிகள் மாரிமுத்து, சிவா, ராஜேந்திரன், ராமசந்திரன், விஜயகாந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவத்தின் போது உடன் இருந்த சுகன்யா, தேவி ஆகியோர்களைவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தொப்பூர் காவல் நிலையம் வந்து சம்பவ இடத்தை நேரில் பார்த்த சாட்சிகளை லாரி டிரைவர் வடிவேல், கிளினர் காளியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என்னுடைய புலன் விசாரணையை முடித்துக்கொண்டு வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்ய காவல் ஆய்வாளர் ஆனந்தவேலு என்பவரின் பார்வைக்கு வைத்தேன். புகார் மனு **அ.சா.ஆ.2,** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3,** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4,** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

__எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை__

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல் நிலையத்தில் இருந்து 1 கி.மீ தூரத்தில் இருக்கிறது. காவல் நிலையத்தில் ரோந்து பணி மேற்கொண்டு இரவு காவலர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் புகார் அளிக்கும்வரை காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் வரவில்லை என்றால் சரிதான். புகார் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் 2வது பக்கத்தில் இடைசொறுகளாக விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் எழுதப்பட்டு உள்ளது என்றால் சரிதான். ரங்கராஜா என்னும் பெயர் மோகன் என்று திருத்தப்பட்டு உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது விபத்தில் ஒரு நபர் இறந்துவிட்டதாக கொடுக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஒரு நபர் இறந்துவிட்டால் PSOபடி காவல் ஆய்வாளர் தான் விசாரிக்க வேண்டும் என்று உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி முதல் தகவல் அறிக்கை மட்டும் தான் நான் பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், மற்ற விசாரணை காவல் ஆய்வாளர் தான் விசாரித்திருக்க வேண்டும் என்றாலும், நான் விசாரித்தது தவறு என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நிலையில் நான் சொல்வதுபோல் விபத்து உள்ளான வாகனங்கள் இருந்தது அதை சாலை ஓரமாக அப்புறப்படுத்தி வைத்திருந்தார்கள். பார்வை மகஜரில் விபத்துக்கு உள்ளான வாகனங்களையும் அதன் பாகங்களையும் நான் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். அப்படி என்றால் 180 மீ இடைவெளியில் மேற்படி வாகனங்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் லாரி டிரைவர் அ.சா.3 வடிவேல் மற்றும் அ.சா.4 காளியப்பன் ஆகியோர்கள் அடையாளம் காட்டினார்கள். மேற்படி நபர்கள் அடையாளம் காட்டிய பின் பார்வை மகஜர் தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் மொத்தம் 6 நபர்கள் காயம் பெற்றனர். மேற்படி 6 நபர்களிடம் வாக்குமூலம் பெற்றேன். அதை தாக்கல் செய்வது குறித்து காவல் ஆய்வாளருக்கு தான் தெரியும். காயச் சான்றிதழை நான் பெறவில்லை. என்னுடைய புலன் விசாரணையை 12.07.2018 முடித்துக்கொண்டு வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்ய காவல் ஆய்வாளர் ஆனந்தவேலு என்பவரின் பார்வைக்கு வைத்தேன். எந்த தேதி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நிறுத்தப்பட்டு இருந்த லாரி முன் எச்சரிக்கை சமிக்சைகள் எதுவும் இல்லாமல் நிறுத்தப்பட்டு இருந்ததாக சாட்சிகள் கூறவில்லை என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் சமிச்கைகள் இல்லை என்றால் ஒரு வாகனம் இருக்கின்றதா அல்லது செல்கிறாதா என்று தெரியாது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 12.07.2017 அன்று பதிவு செய்து, நீதிமன்றத்திற்கு 16.07.2017 அன்று வந்தது என்றால் சரிதான். இந்த விபத்து எதிரியால் ஏற்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லாமல், ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.19 17:28:48 +0530